# குளித்தலை நகராட்சி

31.01.2019.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. தமிழ்நாடு அரசு நிதி(படிகள்) துறை, அரசாணை எண்.05, நாள்–08.01.2019, மிகை ஊதியம் 2017–2018.ம் கணக்கு ஆண்டிற்கு தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் வழங்குதல் ஒப்பளிப்பு – ஆணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.76/2019/சி1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஜனவரி–2019.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி–2019.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 04. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால் அவர்கள், அலுவலக பணி நிமித்தமாக கீழ்க்கண்டவாறு வெளியூர் சென்றுவந்தமைக்கு பயணப்படி தொகை ரூ.11,120/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பயண தேதி | பயண ஊர் | பயணத்தின் காரணம் | பயணபட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | 11.12.2018 | சென்னை | SBM & SOE Outsourcing தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை சந்தித்து வரப்பட்டது. | 2630.00 |
| 2) | 17.12.2018 | சென்னை | ESCO internal flamming, Bio mining water ATM தொடர்பாக ஆய்வுக்கூட்டம் CMA Office. | 2630.00 |
| 3) | 21.12.2018 | சென்னை | ADB தொடர்பாக Hyatt Resitancy கருத்தரங்கில் கலந்துகொள்ளப்பட்டது. | 2630.00 |
| 4) | 22.01.2018 முதல் 23.01.2018 | சென்னை | Water ATM, SBM, Bio mining தொடர்பாக ஆய்வுக்கூட்டம் CMA Office. | 3230.00 |
| | | | மொத்தம் | 11120.00 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1245/2018/அ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.38984/2014/பி1, நாள்–11.01.2019, இணைப்பு–3 (Annexure-3) பக்கம்–21, வரிசை எண்.37.ல், 11 பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.19.80 லட்சம் 8.வது மாநில உயர்மட்ட குழுவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2643/2018/இ1)

பொருள்– 06. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5370 என்ற வாகனத்திற்கு இரண்டு டயர்கள் மற்றும் டீயுப் வாங்குவதற்கு மன்ற தீர்மானம் எண்.101, நாள்–15.05.2018.ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி குறைந்த விலைப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | S.S.Tyers, குளித்தலை | ரூ.17800.00 |
| 2) | S.B.Tyers, குளித்தலை | ரூ.17750.00 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள S.B.Tyers, குளித்தலை விலைப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்.1013/2018/எச்1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கு குப்பைகள் பயோமைனிங் முறையில் அகற்றும் பணிக்குரிய தற்போதைய நிலையை புகைப்படம், வீடியோ ஆவணங்கள் தயாரித்து வழங்கும் பணி மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.238, நாள்–30.11.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 05.11.2018 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | சத்தியமங்கலம் உரக்கிடங்கு குப்பைகள் பயோமைனிங் முறையில் பணிக்குரிய நிலையை புகைப்படம், வீடியோ ஆவணங்கள் தயாரித்து வழங்கும் பணி மேற்கொள்ளுதல் | 1). Safetronics-Tristar, 3, Gorrymedu, Trichy | 33965.00 |
| | | 2). Arun Videos & Photos, 31A, Madurairoad, Trichy-5 | 32170.00 |
| | | 3). Safe Tech, 3/3,Kadambarkovil, Kulithalai. | 30900.00 |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.3.ல் ஆன M/s.Safe Tech, Kulithalai நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.3657/2018/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி வார்டு 19, ரயில்வே ஸ்டேசன் பகுதி தெருவிளக்குகளுக்கான மின் இணைப்புக்கு தேவையான மின் உபகரணங்கள் வயர் ஆகியவை வாங்க 27.08.2018.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | மின் உபகரணங்களின் விபரம் | ஜே.எல். எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை. | உஷா எலக்ட்ரிக்கல்ஸ், குளித்தலை. | செல்வி எலக்ட்ரிக்கல்ஸ் & கோ, குளித்தலை. |
|---|---|---|---|---|
| | | ஒரு எண்ணிக்கைக்குரிய விலை | | |
| 1) | 7/20 காப்பர் வயர் | 100 / 1m | 125 / 1m | 135 / 1m |
| 2) | 2x1½ தகர பெட்டி | 1000 | 1100 | 1150 |
| 3) | 2x 1½ போல்ட் நட் | 200 | 250 | 260 |
| 4) | கிளாம்ப் செட் | 100 | 120 | 130 |
| 5) | 1” பிவிசி பைப் 1 அடி | 15 | 20 | 25 |
| 6) | 6 ஆம்ஸ் பியூஸ் கேரியர் | 200 | 225 | 235 |
| 7) | 1” பிவிசி பெண்ட் | 25 | 30 | 35 |

மேற்கண்ட விபரப்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஜே.எல்.எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்கலாம். மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதிபெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2700/2018/இ1)

பொருள்– 09. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.28369/ஜே3, நாள்–04.12.2018.ல், குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், தனியார்மயப்படுத்துதலின்கீழ் 52 துப்புரவு பணியாளர்களை விநியோகிக்க திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அழைப்பின்மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட அட்டவணைப்படி ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.340/– அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 52 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.340/– வீதம் உத்தேச செலவினம் கீழ்க்குறிப்பிட்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கூலி ரூ.340/– வீதம், 52 நபர்களுக்கு 365 நாட்களுக்கு | = | 6453200.00 |
| 2. | கூடுதல் 10 சதவீதம் (இ.எஸ்.ஐ, இ.பி.எப், காப்பீடு, சீருடைகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்–<br>ESI 30% = 306527.00<br>EPF 30% = 845369.20<br>Uniforms 20% = 193596.00<br>Health Safety Equipments 20% = 258128.00<br>1603620.20 | = | 1603620.20 |
| 3. | Insurance 2% நிர்வாக செலவினம் | = | 129064.00 |
| 4. | கூடுதல் 5 சதவீதம் சேவை வரி | = | 0 |
| 5. | கூடுதல் 1 சதவீதம் நிர்வாக செலவினம் | = | 645320.00 |
| | **ஆகமொத்தம்** | **=** | **8831204.20** |

மேற்கண்ட கணக்கிட்டின்படி ரூ.8831204.20 உத்தேச செலவினத்தில் தனியார்மூலம் மூன்று சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்க நகர்மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளிகோர அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட உத்தேச செலவுத்தொகை ரூ.8831204.20 நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி காவேரிநகர், பெரியார்நகர், பாலாஜிநகர் மனைப்பிரிவுகளின் விளையாட்டு மைதானங்களில் உள்ள முட்செடிகள் மற்றும் சீமை கருவேல மரங்களை ஜே.சி.பி.மூலம் அகற்ற 27.08.2018.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்காணும் விபரப்படி.

| வ. எண். | விபரம் | ஜே.சி.பி. இயந்திரம் 1மணி நேரத்திற்கு வாடகை ரூபாய் |
|---|---|---|
| 1) | லயன்ராஜா டிப்பர் சர்வீஸ், குளித்தலை | 900.00 |
| 2) | V.K.R. டிப்பர் சர்வீஸ் | 850.00 |
| 3) | G.S.டிப்பர் & லாரி சர்வீஸ் | 950.00 |

மேற்கண்ட பணிக்கு வரிசை எண்.2.ல் ஆன V.K.R. டிப்பர் சர்வீஸ் நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.2499/2018/இ1)

பொருள்– 11. இந்நகராட்சி பொது சுகாதாரப் பணிகளுக்கு 52–துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் விநியோகம் செய்யும் பணிக்கு 18.01.2019.ல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்கப்பட்டது.
1). PRG Construction, Karur.
2). Our Land Engineering Work Pvt., Ltd., Chennai.
மேற்கண்ட நிறுவனங்களில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதிகளை நிறைவு செய்யும் விதத்தில் இருந்ததால், மேற்படி நிறுவனத்தின் விலை ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனங்கள் கீழ்க்குறிப்பிட்டவாறு தனது விலையினை தெரிவித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

..4..

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நபர் ஒருவருக்கு குறிப்பிட்ட விலை |
|---|---|---|
| 1) | PRG Construction, Karur | ரூ.465.00 |
| 2) | Our Land Engineering Work Pvt., Ltd., Chennai | ரூ.480.00 |

மேற்குறிப்பிடப்பட்ட விலையின்படி PRG Construction, Karur நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி, தொழில்நுட்ப தகுதிகளை நிறைவுசெய்யும் விதத்திலும் மற்றும் நபர் ஒருவருக்கு குறிப்பிட்ட விலை ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை தெரிவித்துள்ளது. இதன்படி, 52–நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.465.00 வீதம் வருடம் ஒன்றிற்கு ரூ.88,25,700/– ஆகும்.

மன்றத் தீர்மானத்தில், மேற்படி பணிக்கு கீழ்க்கண்டவாறு உத்தேச செலவினம் ரூ.88,31,204.20–க்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்குறிப்பிட்டவாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கூலி ரூ.340/– வீதம் 52 நபர்களுக்கு 365.நாட்களுக்கு | | 6453200.00 |
| 2) | கூடுதல் 10–சதவீதம் (ESI., EPF, காப்பீடு, சீருடைகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் | | 0 |
| | ESI 30% | 306527.00 | 0 |
| | EPF 30% | 845369.20 | 0 |
| | Uniforms 20% | 193596.00 | 0 |
| | Health, Safety Equipments 20% | 258128.00 | 0 |
| | | 1603620.20 | 1603620.20 |
| 3) | கூடுதல் 5–சதவீதம் சேவை வரி | | 0 |
| 4) | கூடுதல் 1–சதவீதம் நிர்வாக செலவினம் | | 645320.00 |
| 5) | ஆயுள் காப்பீடு | | 129064.00 |
| | ஆகமொத்தம் | | 8831204.20 |

| விபரங்கள் | மன்றத் தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்ட சதவீதம் | பணியாளர்களுக்கு அடிப்படை வசதிகள், நிர்வாக செலவினத்திற்கு செலுத்த வேண்டிய சதவீதம் | ரூ.340/– நாள் ஒன்றுக்கு என்ற அடிப்படையில் | மொத்தம் வருடத்திற்கு (ரூபாய்) |
|---|---|---|---|---|
| ESI | 30% | 4.75 % | 16.15 | 306527.00 |
| EPF | 30% | 13.10 % | 44.54 | 845369.20 |
| Uniforms | 20% | 3.00 % | 10.20 | 193596.00 |
| Safety equipment | 20% | 4.00 % | 13.60 | 258128.00 |
| Administrative charges | 01% | 10.00 % | 34.00 | 645320.00 |
| Insurance | 0 | 2.00% | 6.8 | 129064.00 |
| Service Tax | 05% | 0 | 0 | 0 |
| Total | | | 125.29 | 2378004.20 |

மேற்குறிப்பிட்ட அடிப்படை மதிப்பீட்டில் சேர்க்க வேண்டியுள்ளது. அதன் விபரம்

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுத் தொகை | = | 6453200.00 |
| கலம் 3.ன்படி மதிப்பீட்டிற்கு | = | 2378004.20 |
| மொத்தம் | = | 8831204.20 |

மத்திய அரசின் நிதி (வருவாய்) துறையின் சுற்றறிக்கை எண்.25/2012 (சேவைவரி) சேவை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, திருத்தப்பட்ட மதிப்பீட்டில் சேவை வரித் தொகையினை நீக்கம் செய்யலாம்.

52–துப்புரவு பணியாளர்களை வேலை நேரடியாக நியமனம் செய்தால் கீழ்க்கண்டவாறு உத்தேச செலவு ஏற்படும்.

துப்புரவு பணியாளர் ஒருவருக்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அடிப்படை ஊதியம் | ரூ. | 15700 | | |
| அகவிலைப்படி | ரூ. | 1413 | | |
| வீட்டுவாடகைப்படி | ரூ. | 500 | | |
| மருத்துவப்படி | ரூ. | 300 | | |
| இதரப்படி | ரூ. | 200 | | |
| மொத்தம் | ரூ. | 18113 | x 52 Nos x 12 months = | Rs. 11302512.00 |

| | | |
|---|---|---|
| அ) | மேற்குறிப்பிடப்பட்ட 52 துப்புரவு பணியாளர்களை ஒப்புதலை பெற்று நியமனம் செய்தால் ஆண்டு ஒன்றுக்கு செலவு | ரூ.11302512.00 |
| ஆ) | ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலை ஒப்பந்தப்புள்ளியின்படி ஆகும் செலவுத் தொகை | ரூ.8825700.00 |
| இ) | ஒப்பந்த அடிப்படையில் 52 துப்புரவு பணிக்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை திருத்தப்பட்டது வருடத்திற்கு | ரூ.8831204.20 |
| ஈ) | திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும், புதியதாக துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்தால் ஏற்படும் வித்தியாசத் தொகை | ரூ.2476812.00 |
| உ) | திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும், ஒப்பந்தப்புள்ளி விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகை | ரூ.5504.20 |

எனவே, குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள PRG Construction, Karur நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை முடிவுசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1). பொது சுகாதார அவசர அவசியம் கருதி கூடுதல் செலவினத்திற்கும் ஒப்புதல் வழங்கலாம்.
2). பொது சுகாதார பணியின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3). ESI., EPF, காப்பீடு, சேவை வரி போன்ற இனங்களுக்கு அவ்வப்போது அரசால் நடைமுறைப்படுத்தப்படும் தொகைகளை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4). ஒருவருட ஒப்பந்த காலம் முடிவடைந்தபின், தேவைக்கேற்பவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதித்த சதவிகிதத்தில் ஒப்பந்தத்தை நீட்டித்துக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
5). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 12.

குளித்தலை நகராட்சி 24 வார்டுகளிலும் 7627 சொத்துவரி விதிப்புகள் உள்ளது. இவற்றில் 2031 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதம் 5596 வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க வேண்டியுள்ளது. பயனாளிகள் 5500 நபர்கள் போதிய நிதி நிலைமை இல்லாத காரணமாக, குடிநீர் குழாய் இணைப்புபெற ஏதுவாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் எண்.13277/2018/WS1, நாள்–25.05.2018.ல் குறிப்பிட்டபடி புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் 5500 எண்ணிக்கை வழங்க திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.192.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரி பெறலாம். மேற்படி மதிப்பீட்டுத் தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) வட்டியில்லா கடன் பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கிய பிறகு, இணைப்பு கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றை 10 தவணைகளில் வசூல் செய்து கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பித்து, நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் ( TUFIDCO) மூலம் ரூ.162.93 லட்சங்களை வட்டியில்லா கடனாக இந்நகராட்சியில் அனைத்து குடியிருப்புகளுக்கும், குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற பகதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பராமரிக்கப்படும் சுழல்நிதியை பெற உரிய கடன் விண்ணப்பங்களில் கையெழுத்திட ஆணையருக்கு அதிகாரம் அளிக்கலாம்.
2). திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிபெற திட்ட பிரேரணைகள் சமர்ப்பித்து, நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

3). மதிப்பீட்டுத் தொகை ரூ.192.00 லட்சத்தில், ரூ.162.93 லட்சத்தை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலமாக வட்டியில்லா கடனாகவும், GST, Labour Welfare Fund & Condigencies ஆகியவற்றிற்கு ஆகும் கூடுதல் தொகை ரூ.29.07 லட்சத்தை, நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
4) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தை (TUFIDCO), இந்நகராட்சி சார்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து ஒப்பந்தங்களிலும் கையொப்பமிட அதிகாரம் அளிக்கலாம்.
5) மேற்கண்ட ரூ.162.93 லட்சத்தை வட்டியில்லா கடனாக உரிய காலக்கெடுவில் ஒப்பந்தப்படி நகராட்சி திரும்ப செலுத்த அனுமதிக்கலாம்.
6) மேற்கண்ட திட்டத்தை உரிய காலக்கெடுவில் நிறைவேற்றலாம்.
7) மேற்கண்ட திட்டத்திற்கான வட்டியில்லா கடனை உரிய காலத்தில் தவணைகளாக திரும்ப செலுத்த உரிய வழிவகைளை நகராட்சி வரவு—செலவு திட்டத்தில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
8) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தை (TUFIDCO) நகராட்சி சார்பாக புதியதாக கணக்கு ESCROW (Water Supply Fund) துவங்கவும் மற்றும் கடன் தொகையை உரிய காலத்தில் திரும்ப செலுத்தவும் அதிகாரம் அளிக்கலாம்.
அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று கருத்துரு அனுப்பியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2884/2018/இ1)

பொருள்— 13.
இந்நகராட்சி பொது சொத்துவரி சீராய்வு 2018.க்கு தேவைப்படும் கீழ்க்கண்டவாறு படிவங்கள்
1). குடியிருப்பு கட்டிடம் படிவம் = 7000 எண்ணிக்கை,
2). வணிக கட்டிடம் படிவம் = 2000 எண்ணிக்கை.
அவசர அவசியம் கருதி, ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் 12.09.2018.ஆம் தேதிய முன்அனுமதி பெற்று Tamil Nadu Multipurpose Indco Serve, Trichy நிறுவனத்தில் அச்சிட்டுப்பெறவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/—க்கு மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு— மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2355/2018/அ1)

பொருள்— 14.
குளித்தலை நகராட்சி அலுவலகத்தின் மேற்கூரை மற்றும் இதர மராமத்து பணிக்கு ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.55, நாள்—30.03.2017.ல் அனுமதி பெற்று, 08.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி அலுவலகத்தின் மேற்கூரை மற்றும் இதர மராமத்து பணிகள் | 1). திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.23 % குறைவு |
| | | 2). திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 1.13 % அதிகம் |

அலுவலக குறிப்பு—
1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.23 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.M.செந்தில்குமார் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.474/2017/இ1)

பொருள்— 15.
குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கில் கழிவுநீர்கசடு சுத்திகரிப்பு நிலையம் குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சி பயன்பாட்டிற்கு IUDM 2018—2019 திட்டப்பணியில் அமைக்கப்படுகிறது. அதற்கான 10.01.2019 தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் 04.12.2018.ல் வெளியிடப்பட்டதன் பட்டியல் அக்காா்ட் அட்வர்டைசிங் ஏஜன்ஸிஸ் நிறுவனத்தாருக்கு ரூ.71,820/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கு பகுதியில், குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சிக்கு தினமும் 20 KLD சுத்திகரிப்பு திறன் உள்ள கழிவுநீர்கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு ரூ.285.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 03.12.2018 அன்று ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 10.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி மற்றும் மருதூர் பேரூராட்சிக்கு தினமும் 20 KLD சுத்தகரிப்பு திறன் உள்ள கழிவுநீர்கசடு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | திரு.M.ராமசாமி,<br>TWAD ஒப்பந்ததாரர்,<br>வெள்ளியணை, கரூர். | 4.99 %<br>அதிகம். |
| | | திரு.S.கந்தசாமி,<br>சிவில் ஒப்பந்ததாரர்,<br>பசுபதிபாளையம், கரூர். | தொழில்நுட்ப தகுதியற்றதாக உள்ளது. |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1.ல் ஆன தொழில்நுட்ப தகுதி உடைய திரு.M.ராமசாமி என்பவர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 8.12% கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்பு செய்து கொடுக்கும்படி (Negotiation), குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.M.ராமசாமி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 18.01.2019 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, திரு.M.ராமசாமி, ஒப்பந்ததாரர் இனம் எண். 1.14, 1.16, 1.17, 1.4 மற்றும் 1.46 ஆகிய இனங்களில் விலை குறைப்பு செய்ய சம்மதித்து விலை குறைவு கடிதம் வழங்கினார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், மதிப்பீட்டுக்கு 6.40% கூடுதலாக இருந்தது. எனவே, மீண்டும் விலை குறைப்பு செய்துதரக்கோரி, இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளி குறைப்பு செய்துதரக்கோரி கடிதம் 21.01.2019 அன்று ஒப்பந்ததாரருக்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட கடிதத்திற்கு 28.01.2019.ல் இனம் எண்.1.10 மற்றும் 1.14 இனங்களில் விலை குறைப்பு செய்த வழங்கியதில், ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், 4.99% மதிப்பீட்டைவிட அதிகமாக உள்ளது. கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர் கூலியேற்றத்தினாலும், மதிப்பிட்டிற்கு 4.99% கூடுதலாக வழங்கியுள்ள திரு.M.ராமசாமி, TWAD ஒப்பந்ததாரர், வெள்ளியணை, கரூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1387/2018/இ1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சியில் IUDM 2018–2019 திட்ட தார்சாலை அமைத்தல் பணிக்கான 30.01.2019 தேதிய ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்ஸிஸ் மூலம் 08.01.2019.ல் வெளியிடப்பட்ட விளம்பரகட்டண பட்டியல் நாள்–12.01.2019.ன்படி ரூ.67,284/–ஐ, வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1). அனுமதி வழங்கலாம்.

2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2251/2018/இ1)

பொருள்– 18. குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணியினை மேற்கொள்ள, ஒப்பந்த அடிப்படையில் 4 துப்புரவு பணியாளர்கள் 1 வருடத்திற்கு சப்ளைசெய்யும் பணிக்கு ரூ.5.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.241, நாள்–31.12.2018.ல் அனுமதி பெற்று, 21.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணியினை மேற்கொள்ள, ஒப்பந்த அடிப்படையில் 4 துப்புரவு பணியாளர்கள் 1 வருட காலத்திற்கு சப்ளைசெய்யதல். | 1). PRG Construction, 13A, Jawagar Bazzar, Karur – 639 001. | மதிப்பீட்டிலான சதவீதம் |
| | | 2). Our Land Engineering Work Pvt., Ltd., 1, Rajajisalai, Chennai – 600 083 | 3.23 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிலான சதவீதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள PRG Construction நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.4128/2018/எச்1)

*******

# <u>குளித்தலை நகராட்சி</u>

31.01.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 1 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 2 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 3 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 4 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 5 | பதிவு செய்யப்பட்டது. |
| 6 | 6 | 6 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 7 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 8 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 9 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 10 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 11 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 12 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 13 | 13 | 13 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 14 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 15 | 15 | 15 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 16 | 16 | 16 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 17 | 17 | 17 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 18 | 18 | 18 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.